# அதிபர் தம்பு ஞாபகார்த்த நிதியத்திற்கு வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாகிளை 1000 டொலர்கள் அன்பளிப்பு!

வேலணை மத்திய கல்லூரியின் இரண்டாவது அதிபராகவும் பாடசாலையின் வளர்ச்சியில் அதிக பங்காற்றியவராகவும் சிறந்த நிர்வாகியாகவுந் திகழ்ந்த அதிபர் திரு.வி.தம்பு அவர்களது காலத்தில்தான் கல்லூரியில் மாணவர் தொகை அதிகரிக்கப் பட்டதுடன் க.பொ.த. உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகள் பெறத்தொடங்கி விஞ்ஞானம், கலை ஆகிய பகுதிகளில் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்கத் தொடங்கினர் என்றால் மிகையாகாது. அத்துடன் இவரது காலப்பகுதியில் தான் கல்லூரியின் புதிய மாடிக் கட்டிடங்கள் கட்டப்பட்டதுடன் கல்லூரியில் அமைந்துள்ள சிவகாமி சமேத நடராஜப் பெருமான் ஆலயத்திற்கு அடிக்கல்லும் நாட்டப்பெற்றது.

மேலும் அமரர் வி.தம்புவின் நிர்வாகக் காலப்பகுதியின் இறுதிக் காலகட்டத்தில் நாடு பூராவும் சுய மொழி மூலம் கல்விகற்கும் வாய்ப்பு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட போது இப்பாடசாலையிலும் தமிழ் மொழிமூலம் கல்வி கற்க மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது டன், இக்காலப்பகுதியிலே இக்கல்லூரி வேலணை மத்திய மகாவித்தியாலயம் எனத் தரம் உயர்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இது ஓர் கலவன் பாடசாலையாக இருந்தமையால் மாணவ மாணவிகள் தங்கிக் கல்வி கற்கக் கூடிய ஆண்கள், விடுதி, பெண்கள் விடுதி போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டது. இப்பாடசாலை தீவகத்திலேயே முதலாந்தரப் பாடசாலையாக விளங்கியதுடன் ஏழுதீவுகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளும் விடுதிகளில் தங்கித் தமது கல்வியறிவைப் பெற்றுக்கொண்டனர். இம் மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்ப்பதற்குத் துறைசார்ரீதியில் சிறந்த ஆசிரியர் குழுவையும் இப்பாடசாலை கொண்டு விளங்கியது அன்னாரது காலப் பகுதியிலேயேயாகும்.

அதிபர் அமரர் வி.தம்பு அவர்களே பாடசாலை வரலாற்றில் நீண்ட காலம் (1951-1962) அதிபராகவிருந்த பெருமைக்குரியவராகவும் இன்றும் அவரது மாணவர்களாலும் தீவக மக்கள் பலராலும் நினைவு கூரப்படும் அதிபராகவுந் திகழ்கின்றார். இதற்குச் சான்றாக அவரது மாணவர்களான இன்றைய இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவரும் சங்கத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளருமான இ.சுந்தரமூர்த்தி அவர்களும் அமெரிக்காவிலுள்ள வைத்தியக்கலாநிதி குலோத்துங்கம் அவர்களும் இணைந்து ஆளுக்குத் தலா 50,000 ரூபாய்கள் வங்கியிலிட்டு அமரர் தம்பு ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் என்ற பெயரில் ஒரு புலமைப் பரிசில் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துக் கொழும்பு பழைய மாணவர் சங்க நிர்வாகத்தினூடாக இப்பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் புகும் பின்தங்கிய மாணவர்களுக்கு இப்புலமைப் பரிசில் மூலம்உதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பௌதீக விஞ்ஞானத் துறையில் கல்விகற்கும் திரு.இராசரெத்தினம் விஜயதீபனுக்கு இவ்வாண்டு முதன் முறையாக இப்புலமைப்பரிசில் மூலம் நிதியுதவியை வழங்கி வருகின்றனர். மேலும் பல வறிய மாணவர்களுக்கு இந்த உதவி தேவைப்படுவதனால் இந்நிதியத்திற்கு நிதியுதவியளிக்கும் படி திரு.இ.சுந்தரமூர்த்தி அவர்கள் கனடாவிலுள்ள வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்திடம் விடுத்த வேண்டு கோளுக்கிணங்கித் தங்களது பங்களிப்பாக 1000 டொலர்களை அனுப்பி வைத்துள்ளதாகப் பழைய மாணவர் சங்கத்தின்தலைவர் சி. இளஞ்செழியன் நம்நாட்டிற்குத் தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இம் மாதம் 24ம் திகதி (24-10-98) சனிக்கிழமை மாலை ஐந்து மணிக்கு 861 Broadviewஇல் உள்ள தமிழீழச் சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளதாகவும், அன்றயதினம் வன்னிப் பகுதியில் உணவு, மருந்துத் தடையால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக சந்திப்போமோ திரைப்படக்காட்சி மூலம் திரட்டப்பட்ட நிதியை கையளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.